DEPUTY CHAIRMAN : I have heard the hon. Member and the viewpoint of the Government. Though the subject-matter of the motion is a specific matter of recent occurrence, the matter sought to be discussed involves nothing more than the ordinary administration of law. I, therefore, withhold consent to the raising of the matter.

## IV. STATEMENT BY THE MINISTER FOR LOCAL ADMINISTRATION CORRECTING ANSWER TO SUPPLEMENTARY QUESTION ON STARRED QUESTION 70

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்ட ரெயில்வே செஸ் நிதியைப் பயன் படுத்துவது பற்றிய சட்ட மன்றக் கேள்வி எண் 70(257) 1-9-1970 அன்று என்னால் பதிலளிக்கப்பட்டது.

திரு. கே. ராஜாராம் அவர்கள் கீழ்க்கண்ட துணை வினாக்களைக் கேட்டார் :

இந்த மாவட்டங்களில் செலவு செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மாவட்ட வளர்ச்சிக் குழுவின் அங்கீ காரம் இதற்கு வேண்டுமா ? அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு யூனியனுக்கும் இவ்வளவு என்று உத்தரவிட்டால் போதுமா ? மாவட்ட வளர்ச்சிக் குழுவில் இது வைக்கப்பட வேண்டுமா ? அரசாங் கத்தின் அனுமதியும் பெற வேண்டுமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

அத்துணை வினாக்களுக்கு, கீழ்க்கண்டவாறு நான் பதில் கூறினேன்:

''மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே இந்தப் பொறுப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். பெரும்பாலும் மாவட்ட வளர்ச்சி மன்றங்களையும், ஊராட்சி ஒன்றியங்களையும் கலந்து கொண்டு தான் செய்யப்படும் என்று கருதுகிறேன். மீண்டும் அரசாங்கத்தின் அனுமதிக்காக வரவேண்டியதில்லை என்று தான் நினைவு. இந்தச் சிக்கல் தான் குறைக்கப்பட்டிருக்கிறது.''

இதை மறு பரிசீலனை செய்ததில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப் பித்தது தெரிய வந்தது :

இரயில்வே செஸ் நிதி எந்தெந்த நோக்கங்களுக்குப் பயன் படுத்த வேண்டும் என்று அரசினர் ஜூன் மாதம் 1970-ஆம் ஆண்டு ஒரு பொது ஆணை பிறப்பித்தனர். இந்த ஆணைப்படி தஞ்சாவூர் உள்பட மற்ற சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகள் செயற்குறிப்புகளை முறைப் படுத்தி அரசினர் ஒப்புதலுக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளனர். ஆகையால் செயற்குறிப்புகள் அரசினரின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமாகும்.